இன்றைய வேளாண் செய்திகள்

**விவசாயிகளுக்கு உதவ அதிகாரிகள் குழு**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் தமிழக அரசு வேளாண்மை துறை சார்பாக விவசாய பிரச்னைகளுக்குத் தீர்வு காண அலுவலர்கள் குழு கிராம பயணத் திட்டம் தொடக்கவிழா நடைபெற்றது. வாடிப்பட்டி வட்டத்தில் சோழவந்தான், மேலக்கால், கச்சைக்கட்டி, ரிஷபம், சித்தாலங்குடி கிராமங்களில் நடந்த விழாவிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் ப.ராமநாதன் தலைமை வகித்து, பேசியதாவது: இந்த திட்டத்தின்படி இருவாரத்திற்கு ஒருமுறை திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் உதவி வேளாண்மை அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று பயிற்சியளிப்பார்கள். 20 விவசாயிகள் அடங்கிய மூன்று குழுக்களை சந்தித்து செயல்விளக்கம் அளிப்பார்கள். இதன் மூலம் விவசாயிகள் விவசாயம் சார்ந்த சந்தேகங்களை நேரில்கேட்டு பயனடையலாம் என்றார். வேளாண்மை உதவி இயக்குநர் அனுசுயா, வேளாண்மை அலுவலர் மயில், ஊராட்சித் தலைவர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**நெற்பயிரில் குலைநோயைக் கட்டுப்படுத்த ஆட்சியர் யோசனை**

நெற்பயிரில் குலைநோயைக் கட்டுப்படுத்து குறித்து விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி யோசனை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் 12,500 ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதாலும், அதிக பனிப் பொலிவும் இருப்பதால் இரவில் குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவுவதாலும், குறிப்பாக சம்பா நெற்பயிரில் பிபீடி 5204 (ஆந்திராப் பொன்னி) மற்றும் வெள்ளைப் பொன்னி ஆகிய நெல் ரகங்களில் குலைநோய் தாக்குவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. குலைநோய் அறிகுறிகள்: இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற ஓரங்களுடன் கூடிய கண்வடிவப் புள்ளிகள் காணப்படும். கதிர்பருவ நிலைக்கு முன்பே கழுத்துப்பகுதியில் நோய்

தாக்கினால் மணிகள் உருவாகாது. கதிர்பருவ நிலைக்குப்பின் தாக்குதல் தென்பட்டால் மணிகள் குறைந்த தரத்துடன் இருக்கும். கணுக்களும் கதிர் காம்புகளும் கருமை நிறமாற்றமடைந்து எளிதில் ஒடிந்துவிடும். கட்டுப்படுத்தும் முறைகள்: தேவைக்கு அதிகமாக உரம் தழைச்சத்து இடுவதை தடுக்க வேண்டும். அதாவது யூரியா அதிகளவு இடக்கூடாது. 10 நாட்கள் இடைவெளி யில் சூடோமோனஸ் புளோசரன்ஸ என்ற பூஞ்சானக் கொல்லியினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் அளவில் கைத்தெளிப்பான் என்றால் 200 லிட்டர் நீரிலும் விசைத்தெளிப்பான் என்றால் 60 லிட்டர் நீரிலும் மூன்று முறை தெளிக்க வேண்டும். நோய் தாக்குதல் அதிகம் தென்பட்டால் கார்பண்டாசிம் அல்லது டிரைசைக்லசோல் என்ற பூஞ்சான் கொல்லியினை ஒரு லிட்டருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து காலை 11 மணிக்குள் அல்லது மாலை 3 மணிக்குப் பிறகு தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**<u>வேளாண் வளர்ச்சித் திட்டத்துக்கு ரூ. 1.21 கோடி ஒதுக்கீடு</u>**

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழக அரசு ரூ. 1.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக ஆட்சியர் சு. கணேஷ் தெரிவித்தார். புதுகை மாவட்ட ஆட்சியரகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 21 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களை வழங்கி மேலும் அவர் பேசியது: வேளாண்மைப் பொறியியல் துறையில் அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், விவசாயிகளுக்கு மழைநீர் அறுவடைப் பணிகள், குறைந்த வாடகையில் புல்டோசர், டிராக்டர், டிரில் போன்ற இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டு வந்தன. அதன்பிறகு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில், இந்த இயந்திரங்களை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. 2014-15-ம் ஆண்டுக்கு 209 விவசாயிகளுக்கு ரூ. 1.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் தற்போது 3 தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 2.25 லட்சம் மானியத்துடன் ரூ. 4.90 லட்சம் மதிப்பிலும், 11 சிறு விவசாயிகளுக்கு ரூ. 7.69 லட்சம் மானியத்துடன் ரூ. 16.53 லட்சம் மதிப்பிலும், 4 பெண் விவசாயிகளுக்கு ரூ. 2.48 லட்சம் மானியத்துடன் ரூ. 5.24

லட்சம் மதிப்பிலும், 3 இதர விவசாயிகளுக்கு ரூ. 86,200 மானியத்துடன் ரூ. 2.54 லட்சம் மதிப்பிலும் என 21 விவசாயிகளுக்கு ரூ. 29.23 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ் விசைக் களை எடுப்பான், பவர் ஸ்ப்ரேயர், நெல் நாற்று நடவு இயந்திரம், பவர் டில்லர், ரோட்டாவேட்டர், வைக்கோல் கட்டும் கருவி ஆகியன சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு அதிகப்படியான மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு சற்றே குறைவான மானியத்திலும் வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல, மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் தேவைப்படும் விவசாயிகள் புதுக்கோட்டை, அறந்தாங்கி உதவிச் செயற்பொறியாளர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார் ஆட்சியர். இதில், வேளாண் பொறியியல் துறை கண்காணிப்புப் பொறியாளர் லோகநாதன், திருச்சி மண்டல செயற்பொறியாளர் அறிவழகன், உதவிச் செயற்பொறியாளர் சிதம்பரம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**<u>நெற்பழ நோயை கட்டுப்படுத்த யோசனை</u>**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நெற்பயிர்களைத் தாக்கியுள்ள நெற்பழ நோயைக் கட்டுப்படுத்த வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட வேளாண்துறை இணை இயக்குநர் ஜெ. சேகர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தஞ்சாவூரில் சம்பா, தாளடி நெற்பயிர்கள் கதிர்விட்டு பால்பிடிக்கும் தருவாயில் உள்ளன. மாவட்டத்தில் தற்போது இரவில் நிலவும் குறைந்த வெப்பநிலையால் பூஞ்சாணத்தால் ஏற்படும் நெற்பழ நோய் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. இப்பூஞ்சாணத் தின் உயிர் வித்துக்களானது காற்று, மழைநீரால் பரவி, அதிக சேதத்தை மிகக்குறைந்த காலத்திற்குள் ஏற்படுத்தும். மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கர்நாடக பொன்னி ரகம் சிஓ-43, சிஓஆர்-50 மற்றும் சொர்ண சப் ரகங்களில் தற்போது இந்த நோய் தாக்குதல் தென்படுகிறது. இதைக் கட்டுப்படுத்தவும், பரவாமல் இருக்கவும் முன்னெச்சரிக்கையாக சூடோ மோனஸ் ஏக்கருக்கு 400 கிராம் அல்லது 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து, மறுநாள் தெளிநீரை வடிகட்டி, அதனுடன் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து தெளிக்க வேண்டும்.

நோய்த் தாக்குதல் உள்ள பயிரில் பிரோபிகோசோல் அல்லது டிரைசைக்ளோ செல் 200 மிலி அல்லது காப்பர் ஹைராக்சைடு (கோசைட்) 500 மிலியை ஏக்கருக்கு தெளித்து, நெற்பழ நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**வெல்லம் வரத்து அதிகரிப்பு**

பரமத்திவேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் ஏலச் சந்தைக்கு புதன்கிழமை அதிக வெல்லம் கொண்டுவரப்பட்டது. பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தைக்கு 11 ஆயிரம் உருண்டை வெல்ல சிப்பங்களும் (30 கிலோ கொண்ட ஒரு மூட்டை), 13 ஆயிரம் அச்சு வெல்ல சிப்பங்களும் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. கடந்த வாரம் உருண்டை, அச்சு வெல்லம் ஆகிய இரண்டும் சேர்ந்து 20 ஆயிரம் வெல்ல சிப்பங்கள் மட்டுமே ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதை முன்னிட்டு, புதன்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 24 ஆயிரம் வெல்ல சிப்பங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. வெல்லம் ஏலம் எடுப்பதற்கும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்திருந்தனர். இதனால் வெல்லம் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் குண்டு வெல்லம் 30 கிலோ கொண்ட சிப்பம் ஒன்று ரூ.1200-க்கும், அச்சு வெல்லம் ரூ.1130-க்கும் ஏலம் போனது. புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் குண்டு வெல்லம் ரூ.1250-க்கும், அச்சு வெல்லம் ரூ.1300-க்கும் ஏலம் போனது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வெல்லம் விலை உயர்ந்துள்ளதால் கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகளும், வெல்லம் காய்ச்சும் ஆலை உரிமையாளர் களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.


தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**நீர்வழி திட்டத்திற்கு முன்னுரிமை கொடுப்போம்!**

கடந்த இரு நாட்களாக, இந்தியாவின் நீர் பயன்பாடு மற்றும் தமிழக ஆறுகளை எவ்வாறு இணைக்கலாம் என்பது குறித்து பார்த்தோம்.இனி, தமிழகம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா ஆகிய நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கக்

கூடிய தென்னக இணைப்பை, எப்படி உருவாக்குவது எனப் பார்ப்போம். இந்த மாநிலங்கள் அனைத்தும், கிருஷ்ணா, கோதாவரி, காவிரி, தாமிரபரணி, முல்லைப் பெரியாறு, வைகை, பாலாறு ஆகிய ஆறுகளையே, நீர்பாசனத்துக்கு பெரிதும் சார்ந்திருக்கின்றன. வெள்ளம் ஏற்படும்போது, இம்மாநிலங்களில், நீருக்கு பிரச்னை இருப்பதில்லை. 30, ஜனவரி 2013 அன்றைய மத்திய நீர் ஆணையத்தின் தரவுகளின்படி, தென்னிந்திய ஆறுகளின் மொத்த நீர் கொள்திறன், 15 ஆயிரத்து 300 கோடி கன அடி தான். அவற்றில், தற்போதுள்ள நீர் சேகரிப்பு இடங்கள் அனைத்தும் சேர்ந்து, 4,800 கோடி கன அடி நீரை மட்டுமே, தேக்கக் கூடிய வசதிகளைக் கொண்டிருக்கின்றன.




ஆனால், வெள்ளப் பெருக்கின்போது, கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் மட்டும், 2,000 - -3,000 டி.எம்.சி., நீர் ஆந்திராவின் அணைகள், நீர்த் தேக்கங்கள், ஏரிகள் ஆகியவற்றை நிரப்பிய பிறகும், கடலில் சென்று கலக்கிறது. அதே நேரத்தில், தெலுங்கானாவில் பல பகுதிகளில், நீர்ப்பற்றாக்குறை நிலவுகிறது.வறட்சி பருவங்களில், தென் மாநிலங்கள் அனைத்துமே வறண்டு விடுகின்றன. இந்தப் பிரச்னை, மாநிலங்களில் அரசியல் மயமாகிறது. அரசுகளும், கட்சிகளும், கடுமையான நிலைப்பாடுகளை எடுத்து, மாநிலங்களுக்கிடையில் பதற்றத்தை உருவாக்குகின்றன. முன் முடிவுடன் இந்தப் பிரச்னையை அணுகினால், பேரம் பேசுவதற்கான சந்தர்ப்பம் அமையாமல் போய் விடும்.நீதிமன்ற வழக்குகள், தீர்ப்பாய முடிவுகள், கோரல்கள், எதிர்கோரல்கள் என, இந்தப் பிரச்னைகள் நீள்வதால், நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல் போகும் நிலை ஏற்படுகிறது. நீதிமன்ற உத்தரவை நிராகரிக்கும் முடிவுகள், சட்டமன்ற தீர்மானங்கள் மூலம் எடுக்கப்படுகின்றன. மோசமான நீர் மேலாண்மை காரணமாக ஏற்படும் இந்தநிலை, குழப்பத்துக்கு காரணமாகி, யாருக்கும் எந்த மாநிலத்துக்கும், நன்மை உருவாக்கக் கூடிய வாய்ப்பையும் கெடுக்கிறது. இறுதியாக, எல்லா மாநிலங்களிலும் உள்ள

விவசாயிகளும், மக்களுமே பாதிக்கப்படுகின்றனர்.இந்த நிலையை தவிர்க்க, ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழக மாநிலங்களில் உருவாகும் வெள்ளப் பெருக்கை, அதி -திறன் நீர்வழிகளில் செலுத்தி, சேகரித்து, வறட்சி ஏற்படும் போதெல்லாம் பகிர்ந்து கொள்ளலாம். ஆந்திர பிரதேச அதி -திறன் நீர்வழிகளும், தமிழக அதி -திறன் நீர்வழிகளும் ஒரே மட்டத்தில் இணையக் கூடியவையாகவும், தமிழக - -ஆந்திர எல்லையில், வேலுார் அருகே இணையக் கூடியதாகவும் இருக்கின்றன. கட்டுக்கடங்காத வெள்ளப் பெருக்கையும், இந்த இணைப்பு தவிர்க்கும். வெள்ள காலத்தில், 3,000 முதல் 4,000 டி.எம்.சி., நீரை, தென்னக நீர்வழி இணைப்பு பெற முடியும். இது, எல்லா பருவ காலங்களிலும், எல்லா மாநிலங்களுக்குமான தேவையைப் பூர்த்தி செய்யும்.

**<u>ஆந்திரா</u>**

ஆந்திராவில், வெள்ளப் பெருக்கு காலத்தில், 2,500 டி.எம்.சி., நீரையும், வழக்கமான மழைக் காலத்தில், 750 டி.எம்.சி., நீரையும், கோதாவரி ஆறு கடலுக்கு அனுப்புகிறது. இந்த நீரைச் சேமிக்க, நீர்ப் பாசன வாய்க்கால்களும் ஏரி, குளங்கள் உள்ளிட்ட நீர்த்தேக்க நிலைகளையும் உருவாக்க வேண்டும். இதன் மூலம், கோதாவரி படுகையில், வேளாண் நிலங்களின் பரப்பு, 30 சதவீதம் அதிகரிக்கும்.மின் இணைப்பு போல, நீர் வழிகளிலும் இரண்டு திசைகளிலும், நீர் செல்லும். கோதாவரியிலிருந்து காவிரிக்கும், காவிரி யிலிருந்து கோதாவரிக்கும், நீர் பரிமாற்றம் சாத்தியமாகும். அதே சமயத்தில், தற்போதுள்ள எந்த நீர்த் திட்டத்தையும் இது பாதிக்காது. எந்த இடத்திலும், 'பம்ப்பிங்' மூலம் நீரை ஏற்றுவது கிடையாது. இதை, பொதுத்துறை- - தனியார் துறை கூட்டு முயற்சியாக செய்தால், அரசு செலவிடத் தேவையில்லை. 5 முதல் 7 ஆண்டுகளில், இந்தத் திட்டத்தை முடித்து விடலாம். இந்தத் திட்டத்தால், 10 கோடி பேருக்கு, தடையற்ற நீர் வழங்கல் சாத்தியமாகும். இது, ஆந்திராவில், 3.1 கோடி பேருக்கு வேலை வாய்ப்பையும் வழங்கும். அந்த மாநிலத்தில், 1.75 கோடி ஏக்கர் நிலம், கூடுதலாக நீர்ப்பாசன வசதி பெறும். இதன் மூலம் ஆண்டுக்கு, 5,000 மெகாவாட் மின்சாரம், சுற்றுச்சூழல் மாசுபாடு இன்றி கிடைப்பதுடன், நிலத்தடி நீர் மேலேற்றம் காரணமாக, 2,850 மெகாவாட்

மின்சாரம் மிச்சமும் ஆகும்.எனவே, மொத்தமாக, 7,290 மெகாவாட் நீர் மின்சக்தி நமக்கு கிடைக்கிறது. கூடுதல் மீன் வளர்ப்பு, சுற்றுலா, நீர் விளையாட்டு வசதிகளும் கிடைக்கின்றன.ஆந்திராவையும் தமிழகத்தையும் இணைத்து பார்க்கையில், 2,000 கி.மீ., நீள, நீர் வழி அமைகிறது. எனவே, இந்த நீர் வழி, இரு மாநிலங்களுக்கும், சம அளவில் ஆதாயமாகும். குடிநீர், மின்சாரம், நீர்ப்பாசனம், போக்குவரத்து என, எல்லாவற்றுக்கும், இரு மாநிலங்களுக்கும், இந்தத் திட்டம் பயனளிக்கும்.

**<u>கேரளா,கர்நாடகா</u>**

இந்த முறையிலேயே, கேரளாவும், கர்நாடகமும், அதி -திறன் நீர்வழிகளை உருவாக்கலாம். புதுவை உட்பட, தென்னகம் முழுவதிலும், 4,000 டி.எம்.சி., நீரை, இவ்விதமாக பகிர்ந்து கொள்ளலாம். எல்லா மாநிலங்களிலும், நீர்த் தேக்கங்களில் நீர் நிரம்பியிருக்க, இரண்டு போகம் விவசாயம் செய்ய முடியும்.

**<u>எல்லா மாநிலங்களுக்கும் வெற்றியே</u>**

பேராசிரியர் ஏ.சி.காமராஜும் அவரது அணியினரும், இத்திட்டம் பற்றி, எல்லா மாநில அரசுகளுக்கும் எடுத்துரைத்திருக்கின்றனர். தங்களுடைய நலன் பாதிக்கப்படாமல், அதே சமயம் தங்களுக்கு ஆதாயம் கிடைக்கிறது என்பதாலும், தங்களுடைய இருப்பு நீரை இழக்காமல், கடலில் வீணாக கலக்கும் வெள்ள நீரையே கூடுதலாக பெறப் போகின்றனர் என்பதாலும், இம்மாநிலங்கள், இதில் ஆர்வம் காட்டின. சாத்தியமுள்ள தீர்வு: தேசிய அதிதிறன் நீர்வழிகள் கிரிடு: இந்த நீர் இணைப்பு, 15 ஆயிரம் கி.மீ., நீள, தேசிய நீர்த் தேக்க அமைப்பாக மாறும். 60 கோடி பேருக்கு, குடிநீரை வழங்கும்; 15 கோடி ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தை வழங்கும்; 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். நிலத்தடி நீர் மட்டத்தை, 'ரீசார்ஜ்' செய்வதால், 4,000 மெகாவாட் மின்சாரத்தை மிச்சப்படுத்தவும் முடியும்.சாலைப் போக்குவரத்துடன் ஒப்பிடுகையில், 10 முதல் 20 சதவீத அளவே செலவாகும், நீர்வழிப் போக்குவரத்து, இதன் மூலம் சாத்தியமாகி, அனைத்து மாநில அளவில், ஓராண்டுக்கு, 1.5 லட்சம் கோடி எண்ணெய் உற்பத்தி குறையும்.இத்திட்டத்தை நிறைவேற்ற, ஒவ்வொரு மாநிலமும், 6 - 7

ஆண்டுகளுக்கு, ஒட்டுமொத்தமாக, 50 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும்.ஏற்கனவே, சொன்னது போல், BOOT முறையில் இதை அமல்படுத்தினால், பத்தாண்டுகளுக்குள் இதை முடித்து விடலாம். மத்தியில், தீர்க்க தரிசனம் மிக்க தலைமை இருந்ததால், தங்க நாற்கரம் என்ற மிகப் பெரிய, நல்ல திட்டம் எப்படி சாத்தியமாயிற்றோ, அந்த வகையில், இதுவும் சாத்தியமாகும். அதற்கான லட்சிய நோக்கம், நமக்கு வேண்டும்.

**<u>அதிதிறன்நீர்வழிதிட்டம்பொருளாதாரத்தைப்பெருக்கும்</u>**

கடந்த, 2010, செப்டம்பரில், நாங்கள் கனடா நாட்டிற்கு சென்றிருந்தபோது, இரு நாடுகளின் பிரதான செய்திறன்களின் அடிப்படையில், குறைந்த பட்சம், இரண்டு மாநிலங்களிலாவது (தமிழகம், பீகார்) பொதுத் துறை- - தனியார் துறை நிதி முதலீட்டுடன், இத்திட்டத்தை அமல்படுத்துவது குறித்து விவாதித்தோம். கனடா அரசும், அதன் தொழிற்துறையும், தம் ஆர்வத்தை வெளிப்படுத்தின.இந்த பயணத்துக்கு பின், இதற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், மத்திய - மாநில அரசுகளின் நிபுணர் குழு ஒன்று அமைக்கும்படி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதினேன். இத்திட்டம் தொடர்பாக, இதன் பிரதான கர்த்தாவான, ஏ.சி.காமராஜுடன் இணைந்து, கனடாவிலிருந்து வந்த பிரதிநிதிகள் குழு ஒன்று, சம்பந்தப்பட்ட மாநிலங்களின் செயலர்களையும் அதிகாரிகளையும், மத்திய அரசையும் சந்தித்தன.மேலும், கனடா - இந்தியா பவுண்டேஷனும், இது பற்றி விவாதித்து வந்தது. அவர்கள் என்னிடம் வைத்த வேண்டுகோளுக்கு இணங்க, பொன்ராஜும் கூடுதல் விவாதத்துக்காக நியமிக்கப்பட்டார். தமிழக அரசுக்கும் உள்நாட்டு நீர்வழிகள் ஆணையத்துக்கும், இத்திட்டம் பற்றி ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்தோம். தங்கள் மாநிலங்களில், இத்திட்டம் குறித்த சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்ளுமாறு பீகார், ஆந்திரா, தமிழகம், கர்நாடகா, கேரளா ஆகியவற்றுக்கும் வலியுறுத்தியிருந்தோம்.மத்திய அரசு, உள்நாட்டு நீர்வழி ஆணையம் ஆகியவை, தேசிய அதி- திறன் நீர்வழிச் சாலை இணைப்பை உருவாக்க தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும். இந்த திட்டமானது, இந்திய தொழில்துறை, கல்வித்துறை ஆகியவற்றுக்கு வலுசேர்க்கும். அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மேலாண்மையியல், மனிதவியல் துறைகளில்

பயிலும் லட்சக்கணக்கான மாணவர்களுக்கு, நல்ல மதிப்புடனான வேலையை உருவாக்கும். பல்வேறு நாடுகளுடன் இந்தியா, இதன் மூலம் மேற்கொள்ளும் உறவு, இரு தரப்பினருக்குமே பலன் தரும்.

**பொருளாதாரத்தை வலுப்படுத்தும் தேசிய அதிதிறன் நீர்வழிகள்**

நம் விவசாயிகள், இப்போது, 25 கோடி டன் உணவை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் அவற்றை சேமிக்க, வினியோகிக்க, பெரிய வசதிகள் இல்லை. வேளாண்மைக்கான நீர்ப்பாசன வசதிகளும், பின் தங்கியவையாகவே இருக்கின்றன. எனவே வேளாண்- உணவுப் பதன கூட்டுத் திட்டத்தை உருவாக்கி, சம்பந்தப்பட்ட, தொழில்துறை, சேவைத்துறை இணைப்புகளை ஏற்படுத்தி, விவசாயத்தை இந்தியாவின் பிரதான செய்திறன் கொண்ட துறையாக உருவாக்க வேண்டும்.உணவுப் பாதுகாப்பு பிரச்னையும், பொருளாதார நெருக்கடிகளும், கடந்த சில ஆண்டுகளாக நிலை பெறு வேளாண்மைக்கான, உடனடி அத்தியாவசியத் தேவையை வலியுறுத்தி யிருப்பதாக, உலக பொருளாதார அமைப்பு அறிக்கை ஒன்று கூறுகிறது. உலகிலுள்ள, 600 கோடி மக்களில், 100 கோடி மக்கள், தேவையான உணவும், ஊட்டச்சத்துமின்றி உழல்கின்றனர்.வரும் 2050ல், உலக மக்கள் தொகை, 900 கோடியாக இருக்கும். வேளாண் பொருட்களுக்கானத் தேவை, இரு மடங்காக ஆகும். ஆனால், வேளாண் துறையோ, நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம், உற்பத்தி வீழ்ச்சி ஆகிய பெரும் பிரச்னைகளுக்குள் சிக்கியிருக்கும்.இந்தியா தன் பிரதான செய்திறன் சார்ந்து, உலகின் வேளாண் மையமாக உருவாவது மிக அவசியம். இதற்குத் தீர்வு, இந்திய தேசிய அதி- திறன் நீர்வழி இணைப்பு திட்டமே!

**முடிவுரை**

நம் நாட்டில், மகத்தான இயற்கைச் செல்வங்களும் பேரளவுக்கான நீர் ஆதாரங்களும், எல்லையற்ற சூரிய வெளிச்சமும் கிடைக்கின்றன. இவற்றை, நாம், ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதில்லை. எனவே, பாதுகாப்பான குடிநீருக்காகவும் நிலக்கரிக்காகவும், பெட்ரோலிய பொருட்களுக்காகவும், இரும்பு தாதுக்காகவும், சூரிய ஒளி பேனல்களுக்காகவும், நாம் அன்னிய நாடுகளைச் சார்ந்திருக்கிறோம்.நாம் நம் இயற்கை வளங்களான,

கிரானைட்களையும் கனிமங்களையும் ஏற்றுமதி செய்து, அவற்றுக்கு வெளிநாட்டில் வைத்து மதிப்பு கூட்டி, பின் இந்தியாவுக்கு இறக்குமதி செய்து கொள்கிறோம். அந்த மதிப்புக் கூட்டுப் பணியை, இந்தியாவிலேயே செய்வதற்காக, இந்திய தொழில் துறைக்கு, நாம் ஊக்கமளிப்பதில்லை. அதற்கான முன்முயற்சி சார்ந்த, உள்ளடக்குகிற கொள்கைகள் நம்மிடமில்லை. பிரிட்டிஷ்காரர்கள், இந்தியாவை ஆக்கிரமித்தபோது, என்ன நடந்ததோ, அதுவே இப்போதும் நடக்கிறது.வளர்ச்சிக்கு தேவையான உள்ளடங்கு கொள்கைகளை முன்முனைந்து அமல்படுத்தாமல், இந்திய நிறுவனங்களுக்கு, சம மட்டத்திலான செயல்திறனை உறுதிப்படுத்தாமல், நாம் இந்தியாவின் உற்பத்தி சார்ந்த முக்கிய துறைகளை, பாதுகாப்பற்ற நிலையில் வைத்தபடியே, அத்துறைகளை தாராளமயமாக்கி விட்டோம்.எனவே, உலகளாவியப் போட்டிக்கு முன்னால், புதிய தொழில்நுட்பங்கள் இல்லாத, நிதி ஆதார பலம் இல்லாத, திறன் தொழிலாளர்கள் இல்லாத, நம் உள்நாட்டு நிறுவனங்கள், முதலில் வீழ்ச்சி அடைந்தன; பின், இழுத்து மூடப்பட்டு விட்டன.நம் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி, பிரதான செய்திறன் துறைகளை, நாம் உள்ளடங்கு கொள்கைகளோடு மேம்படுத்தியிருந்தால், உலகப் போட்டியை சமாளிக்கும் திறனை, நம் தொழில் துறையினருக்கு அளித்திருக்க முடியும். நிலைபெறு நீர், மின்சாரம், உள்கட்டமைப்பு, வேளாண்மை இல்லையேல், நிலைபெறு செல்வமும் செழிப்பும் இல்லை. எனவே, முதலில் நீர் மீது கவனம் குவிப்போம்.'நாம், நிலைபெறு வளர்ச்சிக்காகவே நிற்கிறோம்; எனவே இதை முதலில் நடைமுறைப்படுத்துவோம்' என, மக்களிடம் நாம் உறுதி கொடுக்க வேண்டும். தனி மனிதர்களை விட, நாடு முக்கியம் என்பதை சூளுரையாக ஏற்க, தேசத்தின், மாநிலங்களின், புதுமை நாடும் தலைவர்களை வலியுறுத்துவோம். தேசிய மற்றும் மாநில அளவிலான அதி- திறன் நீர்வழித் திட்டத்தை அமல்படுத்த, முன்னுரிமை கொடுக்கச் சொல்வோம். தேசிய அதி- திறன் நீர்வழி இணைப்புத் திட்டத்தின் வளர்ச்சியே, நாட்டின் நிலைபெறு வளர்ச்சிக்கு நம்மை அழைத்துச் செல்லும்!**டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் (apj@abdulkalam.com).**

## தென்னை மரம் ஏறுதல்கருவி மூலம் பயிற்சி

கிருஷ்ணகிரி:கிராமபுற இளைஞர்களுக்கு, தென்னை மரத்தில், கருவி மூலம் ஏறுதல் குறித்து, இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது.இது குறித்து, டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுந்தர்ராஜ் வெளியிட்ட அறிக்கை:சென்னை தென்னை வளர்ச்சி வாரியத்துடன் இணைந்து, டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம் சார்பில், தென்னை மரம் கருவி மூலம் ஏறுதல் குறித்து, ஆறு நாட்கள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி, எலுமிச்சகிரியில் உள்ள அறிவியல் மையத்தில் நடத்தப்படுகிறது.வரும், 20ம் தேதி முதல், 25ம் தேதி வரை நடக்கும் இப்பயிற்சியில், 100 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஐந்து குழுக்களாக பிரித்து, பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு, தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்பட்டு, பயிற்சி முடிவில் சான்றிதழும், ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில், விபத்து காப்பீடு மற்றும் தென்னை மரம் ஏறும் ஒரு கருவியும், இலவசமாக வழங்கப்பட உள்ளது.இப்பயிற்சியில் கலந்து கொள்ள குறைந்தபட்சம், எட்டாம் வகுப்பும், 40 வயதிற்குள் இருக்க வேண்டும். தகுதியும், விருப்பமும் உள்ள கிராமப்புற இளைஞர்கள், பெண்கள் மற்றும் விவசாயிகள், தங்கள் பெயரை வரும், 17ம் தேதிக்குள், வேளாண் அறிவியல் மையத்தினை நேரடியாகவோ அல்லது, 04343- 296039, 94437- 96968 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ.1.65கோடிமதிப்பில்கொப்பரைதேங்காய்ஏலம்

பெருந்துறை:பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 1.65 கோடி மதிப்பிலான கொப்பரை, ஏலம் விடப்பட்டது.இங்கு வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், 3,662 மூட்டைகளில், ஒரு லட்சத்து, 70 ஆயிரம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர்.இதில், முதல் தரம் கொப்பரை, குறைந்தபட்ச விலையாக கிலோ, 96.75 ரூபாய்க்கும்,

அதிகபட்சமாக, 101.70 ரூபாய்க்கும் விற்பனையானது.இரண்டாம் தரம் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ, 60.15 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 93.60 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 1.65 கோடி ரூபாய்க்கு ஏல வர்த்தகம் நடந்தது.

**<u>வேளாண் விரிவாக்க முறை திட்டம்காஞ்சிகோவிலில் துவக்கிவைப்பு</u>**

பெருந்துறை:பெருந்துறை அடுத்த காஞ்சிக்கோவிலில், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறைத்திட்டம் தொடக்க விழா நடந்தது.கலெக்டர் பிரபாகர் த லைமை வகித்தார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், திட்டத் தை துவக்கி வைத்து, தொழி ல் நுட்ப செய்திகள்-2015 கையேட்டை வெளியிட்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது: தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்தியவர் ஜெயலலிதா. அவரது தலைமையில், வேளாண் துறை பல்வேறு செயலாக்கப் பணிகளை மேற்கொண் டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, சட்டசபையில், விதி -110ன் கீழ், கடந்த, ஆகஸ்ட், 14ம் தேதி, தமிழகத்தில் உண வு தானிய உற்பத்தியை மே லும் பெருக்கும் வகையில், 16.09 கோடியில், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேள ாண் விரிவாக்க முறைத்திட்டம் செயல்படுத்தப்படும், என ஜெயலலிதா அறிவித்தார். இத்திட்டப்படி, விவசாய உற்பத்தியாளர்கள் குழுக்கள் அமைக்கப்படும், என்றார். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில், காஞ்சிக்கோவிலில் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் நோக்கத்தில், தமிழகத்தில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாகத் திட்டம் (2014-15) கீழ், விவசாயிகள் குழு சார்ந்த நிரந்திர பயணத் திட்டத்தை, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வேளாண் துறையினரால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது, என்றார்.வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ், துணை இயக்குனர்கள் சுப்பிரமணியம், கார்த்திகேயன், சந்திரசேகர், தோட்டக்கலை துணை இயக்குனர் பிரபு, காஞ்சிகோவில் டவுன் பஞ்., தலைவர் பரமசிவம், மாவட்ட கவுன்சிலர் சாமிநாதன், வெட்டையன் கிணறு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத் தலைவர் திங்களூர் கந்தசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## 30 லட்சம் டன் நெல் கொள்முதல்புது சாதனை படைக்க இலக்கு நிர்ணயம்



இந்த ஆண்டு, 30 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைக்க, நுகர்பொருள் வாணிப கழகம் திட்டமிட்டு உள்ளது. மத்திய அரசின் முகவராக இருந்து, தமிழகத்தில் சாகுபடியாகும் நெல்லை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கொள்முதல் செய்து வருகிறது.ஓராண்டுக்கு, 52.32 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய, மத்திய அரசால், தமிழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதை அரிசியாக கணக்கிட்டால், 32.51 லட்சம் டன் வரும்.இதற்கு மேல் நெல் கொள்முதல் செய்தால், அதற்கு மத்திய அரசு மானியம் வழங்காது. இந்த ஆண்டு, சாதாரண நெல் குவின்டாலுக்கு, 1,410 ரூபாய்; சன்னரக நெல் குவின்டாலுக்கு, 1,470 ரூபாய் என, கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.மாநிலம் முழுவதும், சம்பா சாகுபடி, 25 லட்சம் ஏக்கருக்கு மேல் நடந்துள்ளது. அதேபோல, குறுவை, தாளடி, சொர்ணவாரி, நவரை சாகுபடிகளும் நடக்க வாய்ப்பு உள்ளது.இந்தாண்டு நெல் விளைச்சல் அமோகமாக இருக்கும் என கணிக்கப்பட்டு உள்ளது. சம்பா சாகுபடிக்காக, 2,000 நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க நுகர்பொருள் வாணிப கழகம் முடிவு செய்துள்ளது.சம்பா உட்பட, அனைத்து சாகுபடிகளையும் சேர்த்து, 30 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்து புதிய சாதனை படைக்க நுகர்பொருள் வாணிபக் கழகம் திட்டமிட்டு உள்ளது.

## பூ சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

சின்னமனூ சின்னமனூர் பகுதியில் ஆற்றுப்பாசன வசதியில்லாத நிலங்களில் பூ சாகுபடி அதிகளவில் நடக்கிறது. குறைந்த நீர் வளம், தொடர் வருவாய் கிடைப்பதால் பூந்தோட்டம் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். சின்னமனூர் அருகே சீலையம்பட்டியில், தேனி மாவட்டத்தில் பெரிய பூ மார்க்கெட் செயல்படுகிறது. சீலையம்பட்டி, வேப்பம்பட்டி, பல்லவராயன்பட்டி, அய்யம்பட்டி, கோட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் பூ சாகுபடி நடக்கிறது. மல்லிகை, கனகாம்பரம், செண்டு பூ, கோழி கொண்டை உள்ளிட்ட பூ வகைகள் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும்

திருச்சி, கோவை, சென்னை உள்ளிட்ட மாநகரங்களுக்கும் சீலையம்பட்டி மார்க்கெட்டிலிருந்து பூ அனுப்பப்படுவதால் நல்ல விலை கிடைக்கிறது. குறைந்த பராமரிப்பு செலவு நல்ல வருவாய் இருப்பதால் பூ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது பனியின் தாக்கம் அதிகமாக உள்ளதால் மல்லிகை பூ வரத்து முற்றிலும் தடைபட்டுள்ளது. செண்டு, கோழி கொண்டை பூக்கள் வரத்து உள்ளது. சபரிமலை சீசன் என்பதால் பூமாலை கட்ட பயன்படும் செண்டு, கோழி கொண்டை பூக்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது. அடுத்த வாரம் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவதால், பூக்களின் தேவை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு விவ சாயிகளிடம் எழுந்துள்ளது.வேப்பம்பட்டி பூ சாகுபடியாளர் பசுபதியம்மாள் கூறியதாவது: முகூர்த்தம் இல்லாத நிலையில் சபரிமலை சீசன், கோயில்களில் நடைபெறும் மார்கழி பூஜைக்கு தேவையான செண்டு, கோழி கொண்டை பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. பனியின் தாக்கத்தால் பூ வரத்து குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகையையொட்டி பூக்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வாய்ப்புள்ளது. நிலத்தடி நீர் மட்டம் குறைவாக இருப்பதால், அதிக நீர் தேவைப்படாத பூ தோட்டம் அமைத்துள்ளோம். நிரந்தர வருமானம் கிடைப்பதால் பூ சாகுபடியில் தொடர்ந்து ஈடுபடுகிறோம்,, என்றார்.

## <u>தனி பட்டுப்புழு வளர்ப்பு மனைக்கு கருத்துரு</u>

தர்மபுரி:""தர்மபுரியில், 54 லட்சம் ரூபாய் மதிப்பில், விவசாயிகள் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட, அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளது," என, கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்தார்.இதுகுறித்து, அவர் கூறியதாவது: தமிழகத்தில், பட்டுக்கூடு பரிவர்த்தனையில், தர்மபுரி பட்டுக்கூடு அங்காடி முன்னிலை வகிக்கிறது. இந்த அங்காடிக்கு, பிற மாவட்ட பட்டு விவசாயிகளும், பட்டுக் கூடுகளை விற்பனைக்காகக் கொண்டு வருகின்றனர். இங்கு தினசரி, 50 முதல், 100 பட்டு விவசாயிகளும், 25 முதல், 35 பட்டு நூற்பாளர்களும் பட்டுக்கூடு ஏலத்தில் கலந்து கொண்டு, நாள் ஒன்றுக்கு, மூன்று முதல், ஐந்து டன் வரை, பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்து வருகின்றனர். தர்மபுரி மாவட்ட அரசு பட்டுக்கூடு அங்காடியில், 2013-14ம் ஆண்டில், 215 டன் வெண் பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது. 2014-15ம் ஆண்டில், டிசம்பர்

மாதம் வரை, 416 டன் வெண் பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டைவிட, 201 டன் அதிகமாகும்.இந்த ஆண்டு, சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் பட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக, தனி பட்டுப்புழு வளர்ப்புமனை கட்டுவதற்கு, தர்மபுரி மாவட்டத்திற்கு, 11 லட்சத்து, 92 ஆயிரத்து, 500 ரூபாய், அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ், விவசாயிகள் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு, 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டக் கருத்துரு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில், பட்டு வளர்ச்சியை மேம்படுத்த, தர்மபுரி மாவட்டத்தில், பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்களுக்கு மல்பெரி நடவு, சொட்டுநீர் பாசனம் அமைத்தல், தனி பட்டுப் புழு வளர்ப்புமனை கட்டுதல், புழுவளர்ப்புத் தளவாடங்கள், பண்ணை உபகரணங்கள் வழங்குதல் என, மூன்று கோடியே, 50 லட்சம் ரூபாய் மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.இந்தியாவில், கச்சாப் பட்டுத் தேவை ஆண்டுக்கு, 30 ஆயிரம் மெட்ரிக் டன் ஆகும். இதில், 23 ஆயிரம் மெட்ரிக் டன் மட்டுமே, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தின் கச்சாப் பட்டுத் தேவை, ஆண்டுக்கு, 3,000 மெட்ரிக் டன் ஆகும். இதில், 1,200 மெட்ரிக் டன் மட்டுமே, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. 1,800 மெட்ரிக் டன், பிற மாநிலங்களில் இருந்து பெறப்படுகிறது.எனவே, தமிழகத்தில், பட்டு தேவை அதிகளவில் உள்ளதால், விவசாயிகள் பட்டு உற்பத்தியில், அரசு தரும் மானியங்களை பெற்று, லாபம் பெறலாம். இவ்வாறு, அவர் கூறினார்.மாநில பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மணிவண்ணன், பட்டுவளர்ச்சித் துறை மண்டல இணை இயக்குனர் சுயம்பு, உதவி இயக்குனர்கள் நாராயணன், சத்தியன், பட்டுவளர்ச்சித் துறை தொழில்நுட்ப களப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## விவசாயி குழு சார்ந்த நிரந்தரபயணத் திட்ட துவக்க விழா

தர்மபுரி:நல்லம்பள்ளியில், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டம் சார்ந்த நிரந்தர பயணத் திட்டத்தை, நல்லம்பள்ளி யூனியன் சேர்மன் பூக்கடை முனுசாமி, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

இத்திட்டத்தில், நல்லம்பள்ளி, வெங்கடம்பட்டியில் பகுதிகளுக்கு பணியாற்ற உள்ள உதவி வேளாண்மை அலுவலர் செல்வம் மற்றும் மாதேஸ் ஆகியோரை, தர்மபுரி, வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு ) மதுபாலன் அறிமுகம் செய்து வைத்தார்.வேளாண்மை உதவி இயக்குனார் (பொ) அமுதவள்ளி பேசியதாவது:விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க திட்டத்தில், உதவி வேளாண்மை அலுவலர் நிரந்தர பயணத் திட்டத்தில், இவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியினை, எட்டு பகுதிகளாக பிரித்து, திங்கள் முதல் வியாழன் வரை, முதல் வாரத்தில், நான்கு பகுதிகளையும், இரண்டாம் வாரத்தில், நான்கு பகுதிகளையும் பயணம் மேற்கொண்டு விவசாயிகளை சந்திப்பர்.மீண்டும் அதே பகுதிகளை, மூன்றாம் மற்றும் நான்காம் வாரத்தில் சென்று விவசாயிகளை சந்தித்து அப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கேற்ப நெல், ராகி, பயறுவகை பயிர்கள் வாரியாக, விவசாயிகள் ஆடவர் குழுக்களை அமைத்து தொழில் நுட்பங்களை கூறுவர். மேலும், விவசாயின் வயல்களில் செயல் விளக்கங்கள் செய்து காண்பித்து, வயல்வெளிப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பர். மேலும், வாரம் ஒருமுறை வெள்ளிக்கிழமைகளில், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில், உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு ஆய்வுக் கூட்டம் மற்றும், இருவார தொழில்நுட்ப பயிற்சிகள் நடத்தி, அவர்கள் பகுதிகளில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்படும்.இவ்வாறு, அவர் கூறினார். வேளாண்மை பொறியில்துறை பொறியாளர்கள் சந்திரா, சக்திவேல், தோட்டக்கலை அலுவலர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**பேரம்பாக்கத்தில் வேளாண் விரிவாக்க பயண திட்டம் தொடக்கம்**

திருவள்ளூர், : ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட்ட தொடக்க விழா பேரம்பாக்கத்தில் நேற்று முன்தினம் நடந்தது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகித்தார்.

வேளாண்மை இணை இயக்குநர் தி.சுந்தர்ராஜன் வரவேற்றார். பால்வளத்துறை அமைச்சர் ரமணா திட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். முன்னதாக, அமைச்சர் ரமணா, கலெக்டர் ஆகியோர் பேரம்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு ரூ26,000 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். முன்னாள் எம்எல்ஏ சண்முகம், ஒன்றியகுழு தலைவர் தட்சிணாமூர்த்தி, துணைத்தலைவர் சுதாகர், மாவட்ட கவுன்சிலர் பாசுரான், ஒன்றிய கவுன்சிலர் வரலட்சுமி தங்கமணி மற்றும் வேளாண் துறை துணை இயக்குனர் பாபு, உதவி இயக்குனர்கள் எபிநேசர், சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண் உதவி இயக்குநர் கலாதேவி நன்றி கூறினார்.

## வேளாண்மை விரிவாக்க முகாம் துவக்க விழா

பாலக்கோடு, : நாகணம்பட்டி ஊராட்சி மன்ற வளாகத்தில் வேளாண்மை விரிவாக்க முகாம் துவக்க விழா நடந்தது. தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே நாகணம்பட்டி ஊராட்சி மன்ற வளாகத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க முறை மற்றும் அதன் குழுவைச் சேர்ந்த நிரந்தர பயணத்திட்ட துவக்க விழா நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன் தலைமை வகித்துப் பேசினார். நாகணம்பட்டி ஊராட்சித் தலைவர் சரஸ்வதி முன்னிலை வகித்தார். பாலக்கோடு எம்எல்ஏ அன்பழகன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மாரியப்பன் மற்றும் பலர் செய்திருந்தனர்.

## வேளாண்மை கண்காட்சியில் நாளை புதிய பயிர் ரகங்கள் வெளியீடு

கோவை, : கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சார்பில் தென்மண்டல வேளாண்மை கண்காட்சி மற்றும் உழவர் தினவிழா, கருத்தரங்கு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் துவங்கியது. இதில், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலை அரசுத் துறைகளின் பல்வேறு விதமான திட்டங்கள், அதன் பயன்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தயாரிப்பு ஆகியவை குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக 50 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இதை பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் வந்து பார்வையிட்டு செல்கின்றனர். தென்மண்டல வேளாண்மை கண்காட்சி மற்றும்

உழவர் தினவிழா நாளை நிறைவடைகிறது. இதன் நிறைவு விழா பல்கலைக் கழக அரங்கில் நாளை(10ம் தேதி) காலை நடக்கிறது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைவேந்தரும், தமிழக வேளாண்மைத்துறை அமைச்சருமான அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று வேளாண்மை பல்கலைக்கழகம் கண்டறிந்த புதிய பயிர் ரகங்கள், பண்ணைக்கருவிகளை வெளியிட்டு பேசுகிறார். இதில் 5 புதிய பயிர் ரகங்கள், 2 பண்ணைக்கருவிகள் வெளியிடப்படுகிறது. தமிழக அரசின் வேளாண்மைத் துறையின் செயலர் ராஜேஷ் லக்கானி, வேளாண் துறை இயக்குனர் ராஜேந்திரன், துணைவேந்தர் ராமசாமி உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

<u>ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டம் துவக்கம்</u>

ஊட்டி, : ஊட்டி அருகேயுள்ள கல்லக்கொரை கிராமத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டத்தை மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்தார். நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகேயுள்ள கல்லக்கொரை கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்துறை சார்பில் விவசாயிகள் சார் ந்த ஒருங்கிணைந்த வேளா ண் விரிவாக்க முறை திட்ட துவக்க விழா நடந் தது. தோட்டக்கலை இணை இயக்குநர் மணி வரவேற்றார். இதில் மாவட்ட கலெக்டர் சங்கர் திட்டத் தை துவக்கி வைத்து பேசினார். இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை கூடுதல் இயக்குநர் ஜெகதீஸ்குமார், ஊராட்சி ஒன் றிய குழு தலைவர் சாந்தி, ஊர் தலைவர் முருகன் மற்றும் போஜன், நந்திகவுடர், கல்லக்கொரை பகுதி விவசாயிகள், அலுவலர்கள் உட்பட பலர் கல ந்து கொண்டனர். முடிவில் துணை வேளா ண்மை அலுவலர் சந்திரன் நன்றி கூறினார்.

<u>திருச்செந்துறையில் 2,058 வாழைத்தார் ரூ.1.25லட்சத்துக்கு ஏலம்</u>

திருச்சி, : திருச்சி மாவட் டம், ஸ்ரீரங்கம் அடுத்த திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் செவ்வாய்க்கிழமை தோறும் வாழைத்தார் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. இதன் படி, நேற்று முன் தினம் துவங்கி

நேற்று அதி காலை வரை நடைபெற்ற பொது ஏலத்தில் தொட்டியம், அந்தநல்லூர், மண்ணச்சநல் லூர், கிளியநல்லூர், கரியமாணிக்கம், சிறுகாம்பூர், போதா வூர், சென்னக்கரை, செங்குடி, பாண்டியபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயி கள் 23 பேர் பூவன், ரஸ்தாலி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சநாடன், ஏலரிசி ரகங்களை சேர்ந்த 2,058 வாழைத் தார்களுடன் வந்தனர். அதே வேளையில், திருச்செங்கோடு, குளித்தலை, பெட்டவாய்த் தலை, திருச்சி, நெய்தலூர், பெருகமணி, சிறுகமணி, திண்டுக்கல், பண்ணப்பட்டி, கே.கே.நகர், அண்ணாநகர், சமயபுரம், முசிறி ஆகிய ஊர் களில் இருந்து வந்திருந்த 19 வியாபாரிகள் வாழைத் தார் களை ஏலம் எடுத்தனர் இந்த வாழைத் தார்கள் அனைத்தும் ரூ.1.25 லட்சத்துக்கு ஏலம் எடுக்கப்பட்டன. இதில் ரஸ் தாலி தார் ஒன்று அதிகபட்சமாக ரூ.305, பூவன் ரூ.205, மொந்தன் ரூ.205, கற்பூரவள்ளி ரூ.120, பச்சநாடன் ரூ.185 ஏல ரிசி ரூ.140 வீதம் ஏலம் போனது. தரமான வாழைத்தார் அதிகபட்ச விலைக்கு ஏலம் போனது. இந்த வாரமும் இடைத்தரகர்கள் இன்றி, எந்த வித கமிஷன் இல்லாமல் ஏலத் தில் பங்கேற்ற விவசாயிகள் அனைவருக்கும் உடனுக்கு டன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. பூவன் வரத்து அதிகரிப்பு: திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் வாரந்தோறும் நடைபெறும் ஏலத்தில் வாழைத்தார் வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, பூவன் 1,805, மொந்தன் 154, ரஸ்தாலி 26, மொந்தன் 34, பச்ச நாடன் 19 வாழைத்தார்கள் இந்த வாரம் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டன. அதிகபட்சமாக பூவன் ரக வாழைத்தார் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## <u>திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் 10, 12ல் சிறப்பு பொது ஏலம்</u>

திருச்சி, : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் நாளை மறுதினம் (10ம் தேதி) மற்றும் 12ம் தேதி ஆகிய 2 நாட்கள் சிறப்பு பொது ஏலம் நடைபெற உள்ளது. எனவே, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த வாழைத்தார்களுடன் பங்கேற்று பயன்பெறுமாறு கலெக்டர் பழனிசாமி அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நாளை மறுதினம் (10ம் தேதி) மற்றும் 12ம் தேதி

ஆகிய 2 நாட்கள் வாழைத்தார்களுக்கான சிறப்பு பொது ஏலம் நடைபெற உள்ளது. இந்த சிறப்பு பொது ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி அவர்களுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இந்த சிறப்பு ஏலத்துக்கு தங்கள் வாழைத்தார்களை கொண்டு வரும் விவசாயிகள் காலை 11 மணிக்குள் தங்களின் பெயரை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். எனவே, அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் ஆகிய வட்டாரங்களில் வாழை சாகுபடி செய்து தற்போது அறுவடை செய்து கொண்டிருக்கும் வாழை விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்துள்ள வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டுவந்து பொது ஏலத்தில் பங்கேற்று பயன்பெறுமாறு கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## <u>நவீன தொழில்நுட்பம் மூலம் வேளாண் சாகுபடியில் இரு மடங்கு உற்பத்தி மும்மடங்கு வருவாய் பெறுவது எப்படி?</u>

தொட்டியம், : நவீன தொழில்நுட்பம் மூலம், வேளாண் சாகுபடியில் இரு மடங்கு உற்பத்தி மும்மடங்கு வருவாய் பெறுவது எப்படி? என்பது குறித்து தொட்டியத்தில் நடை பெற்ற ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை துவக்க விழாவில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. தொட்டியத்தில் உள்ள வட்டார வேளாண் விரி வாக்க மையத்தில் வேளாண் விரிவாக்கப் பணிகள், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரி வாக்க முறை, உதவி வேளாண் அலுவலர்களு க்கு விவசாயிகள் குழுசார் ந்த நிரந்தர பயணத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான துவக்க விழா நடைபெற்றது. விழாவுக்கு விவசாய அணி மாநில பொருளாளர் தங்கவேல் தலைமை வகித் தார். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், தா.பேட்டை ஒன்றிய மாவட்ட கவுன்சிலர் நெடுமாறன், தோளுர் பட்டி ஊராட்சி தலைவர் ஆறுமுகம், நாகையநல்லூர் தொடக்க வேளண் கூட்டு றவு கடன் சங்கத் தலைவர் ரத்தினம், ஒன்றிய கவுன்சிலர் அருண், பாலு ஆகி யோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராஜாமணி, உதவி வேளாண் அலுவலர்களுக் கான நிரந்தரப் பயணத் திட்டம் குறித்த அட்டவ ணையை வழங்கிப் பேசி னார். அப்போது

நவீன தொழில்நுட்பம் மூலம் வேளாண் சாகுபடியில் இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் பெறு வது எப்படி? என்பது குறித்து விவசாயிகளுக்கும், வேளாண் அலுவலர்க ளுக்கும் சிறப்பு பயிற்சி அளித்தார். மேலும், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரி வாக்க திட்டத்தில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவது குறித்து விளக்கிக் கூறினார். விழாவில் அட்மா சேர் மன் முத்துக்குமார், தொட் டியம் வட்டார முன் னோடி விவசாயிகள் சுப் பையா, சுப்பிரமணியன், வேளாண் உதவி அலுவலர் கள் ஆசைத்தம்பி, மாசிலா மணி, கார்த்திக்கேயன், பன்னீர்செல்வம் சுவாமிநா தன் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர். முன்னதாக, வேளாண் அலுவலர் வேல்முருகன் வரவேற்றார். முடிவில் வேளாண் துணை அலு வலர் அழகர்சாமி நன்றி கூறினார். ஜீயபுரம்: இதே போல், மணிகண்டம் ஒன்றியம், சேதுராப்பட்டியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்ட விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்ட துவக்க விழாவுக்கு ஒன்றியக் குழுத் தலைவர் முத்துக்கருப்பன் தலைமை வகித்து துவக்கிவைத்தார். வேளாண் இணை இயக்குநர் (பொ) மதியழகன், உதவி இயக்குநர் ராஜேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழாவில் முன் னோடி விவசாயிகள் கோவி ந்தன், கணேசன், திருமூர்த்தி, இன்பராஜ் உள் ளிட்ட பலர் பங்கேற்று பயன்பெற்றனர். இதற்கான ஏற்பாடு களை வேளாண் அலுவலர் செல்வராணி, உதவி வேளாண் அலுவலர் ரவி, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>க.பரமத்தியில் ஆடுகள் வளர்ப்பு பயிற்சி முகாம்</u>

க.பரமத்தி, : க.பரமத்தியில் ஆடுகள் வளர்ப்பு பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது. க.பரமத்தி ஒன்றியம் புன்னம் ஊராட்சியில் தமிழக அரசின் விலை யில்லா ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ் 81 பயனாளிகளுக்கு வரும் நாட்களில் இலவச ஆடுகள் வழங்கப் பட உள்ளது. பயனாளிகளு க்கான ஆடுகள் வளர்ப்பு பற்றிய பயிற்சி முகாம் சத்தி ரம் அரசு நடுநிலைப்பள்ளி யில் நேற்று நடைபெற்றது. கால்நடை டாக்டர் அனிதா வரவேற்றார். புன் னம் ஊராட்சித் தலைவர் சுப்பிரமணியம், துணைத் தலைவர் மாலதிமுருகேசன்

ஆகியோர் முன்னிலை வகி த் தனர். கால்நடை மருத் துவ பல்கலை கழக ஆரா ய்ச்சி மைய பேராசிரியர் பாரதி கால்நடைகளை பராமரிப்பது குறித்து விளக்கி பேசினார். மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் மார்க்கண்டேயன் ஆடு வளர்ப்பு பயிற்சி குறித்த கையேடுகளை வழங்கினார். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி தலைமை வகித்து பேசுகையில், தமிழக அரசால் இலவச 4 ஆடுகள் பெறுவோர் ஆடுகளை நன்கு பராமரித்து வந்தால் 2 ஆண்டுகளில் 18முதல் 20 குட்டிகள் வரை கிடைக்கும். இவற் றால் ரூ.30ஆயிரம் முதல் ரூ.40ஆயிரம் வரை குட்டி வளர்ப்பின் தன்மைகேற்ப பயனாளிகளுக்கு கிடைக் கும் உபரி வருமானமாகும். கால்நடைகளை தாக்கும் நோய்களான வெக்கை சார்பு, நீலநாக்கு, செம்மறியாட்டு அம்மை, துள் ளுமாரி, தொற்று கழிதல், கருச்சிதைவு, குளம்பு அழுகல் ஆகிய நோய்களில் இருந்து ஆடுகளை பாதுகாக்க அவ்வப்போது கால்நடை அரசு மருத்துமனைக்கு கொண்டு வந்து உரிய நேரத்தில் தடுப்பூசி போட வேண்டும் என்றார். பயிற்சியில் கால்நடை ஆய்வாளர்கள், உதவியாளர்கள், வார்டு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். முடிவில் குப்பம் கால்நடை மருத்துவர் பார்த்திபன் நன்றி கூறினார்.

## பூச்சி தாக்கிய நெற்பயிருக்கு இழப்பீடு

புதுக்கோட்டை, : மாவட்டத்தில் பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்ட நெற்பயிற்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது. புதுகையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக் குழுக் கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சோமையா தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் காளிமுத்து, மாவட்ட துணை செயலாளர் நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் மாதவன் வேலை அறிக்கை வாசித்தார். இக்கூட்டத்தில் புதுகை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும், காவிரி குண்டாறு இணைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும், மாவட்டத்தில் பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்ட நெற்பயிற்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும், மாவட்டம் முழுவதும் உள்ள விளை நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் காவிரி குண்டாறு இணைப்பு

திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்டக் குழு உறுப்பினர்கள் சண்முகம், தங்கமணி, முருகானந்தம், கைலாசப்பண்டியன் உள்பட சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## வேளாண் பயணத் திட்டம் பேராவூரணியில் தொடக்கம்

பேராவூரணி, : தஞ்சை மாவட்டம் பேராவூரணி வட்டாரத்தில் விவசாயிகளை கொண்ட ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை குழு சார்ந்த பயணத்திட்ட தொடக்க விழா நடைபெற்றது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம் ராமதாஸ் தலைமை வகித்து பேசுகையில், வேளாண்துறை திட்டங்கள், தொழில்நுட்பங்கள் வேளாண்துறை மற்றும் சகோதரத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானிய திட்டங்கள் விவசாயிகளுக்கு விரைவில் சென்றடையும் வண்ணம் ஒவ்வொரு வேளாண்மை உதவி அலுவலர் தொகுதியும் எட்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு நிரந்தர பயணத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உதவி அலுவலர்கள் நிரந்தர பயணத்திட்டத்தின்படி தொடர்புடைய பகுதிகளுக்குச் சென்று விவசாயிகள் மற்றும் பயிர் ஆர்வலர் குழுக்களை சந்தித்து வயல்வெளிகளை ஆய்வுசெய்து பூச்சிநோய் கட்டுப்பாடு தொழில்நுட்ப கருத்துக்கள் மானியத்திட்டங்கள் பற்றி எடுத்துரைக்க வேண்டும். விவசாயிகள் வேளாண்மை உதவி அலுவலர்கள் தங்களின் பகுதிக்கு வருகை தரும் நாளில் தவறாமல் கலந்து கொண்டு தொழில்நுட்ப கருத்துகள் மானியத்திட்டங்களை கேட்டறிந்து பயனடைய வேண்டும் என்று கூறினார். பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஈஸ்வர், வேளாண்மை அலுவலர் ராணி, உதவி அலுவலர்கள் கோகிலா, தீபா, சாந்தஷீலா, சசிகுமார், கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அரசினர் கலைக்கல்லூரியில் மண்புழு உர தயாரிப்பு பயிற்சி கருத்தரங்கம்

மன்னார்குடி, : மன்னார்குடி ராஜகோபாலசுவாமி அரசினர் கலைக்கல்லூரியில் காளான் வளர்ப்பு மற்றும் மண் புழு உர தயாரிப்பு பயிற்சி கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். பேராசிரியர் கோபிநாதன் வரவேற்றார். கருத்தரங்கை புதுக் கோட்டை மன்னர் கல்லூரி முதல்வர் வீரப்பன் துவக்கி வைத்தார். விலங்கியல் துறை தலைவர் ராமு

பேசியதாவது: சமீபகாலமாக விவ சாயம் செய்வதில் ஆர்வம் குறைந்து வருவதால் மாற்று உணவை தேடி செல்ல வேண்டிய நிலையில் மக் கள் உள்ளனர். நமது மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப உணவு பற்றாக்குறை அதிகரிப்பதால் தொழில்நுட்பத்தின் மூலம் மாற்று உணவுக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் சுயஉதவி குழுவினருக்கு உணவு காளான் வளர்ப்பு பயிற்சியையும், வேதிப்பொருட்கள் அற்ற உரமாக பயன்படும் மண்புழு உர தயாரிப்பு பற்றியும் பயிற்சி அளிப்பதற்காகவே இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார். தாவரவியல் துறை பேராசிரியர் வெங்கடேசன், வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் அண்ணாமலை, சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் கவியரசன், தஞ்சாவூர் சரபோஜி கல்லூரி விலங்கியல்துறை பேராசிரியர் ஸ்ரீதரன், அதிராம்பட்டினம் காதர்மைதீன் கல்லூரி பேராசிரியர் ரவீந்திரன் மற்றும் கல்லூரி தாவரவியல் துறை பேராசிரியர் மாதவன் ஆகியோர் பேசினர். கருத்தரங்கில் கல்லூரியின் விலங்கியல் துறை, தாவரவியல் துறை மாணவர்கள் பங்கேற்றனர். பேராசிரியர் வேலாயுதம் நன்றி கூறினார்.

## <u>புகையான் தாக்குதலில் இருந்து சம்பா, தாளடி பயிர்களை காப்பாற்றுவது எப்படி?</u>

தரங்கம்பாடி, : செம்பனார்கோவில் வட்டாரத்தில் புகையான் தாக்குதலில் இருந்து சம்பா, தாளடி பயிர்களை காப்பாற்றுவது எப்படி என்று விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி விளக் கம் அளித்து வருகிறார். செம்பனார்கோவில் வட்டாரத்தில் உள்ள திருவிளையாட்டம், ஈச்சங்குடி, கடலி, கொடைவிளாகம், பகுதிகளில் சம்பா தாளடி பயிர்கள் புகையான் தாக்குதலால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை பார்வையிட்டு அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டு மென கடந்த 4ம் தேதி தின கரன் நாளிதழில் செய்தி பிரசுரமானது. இதைதொடர்ந்து நெடு வாசல், கீழ்மாத்தூர், கூடலூர், திருவிளையாட்டம், சங்கரன்பந்தல், இலுப்பூர், உத்திரங்குடி, ஈச்சங்குடி, கடலி, மேமாத் தூர், எரவாஞ்சேரி, ஹரிஹரன்கூடல் உள்ளி ட்ட இடங்களில் செம்பனார்கோயில் வட்டார வேளாண் உதவி இயக்குனர்

வெற்றிவேலன், ஆட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் திருமுருகன், உதவி வேளாண் அலுவலர்கள் ரவிச்சந்திரன், கலையரசன் ஆகி யோர் புகையான் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். ஹரிஹரன்கூடலில் விவசாயிகள் குஞ்சிதபாதம், சின்னப்பிள்ளை, சிவராமன், வெண்மொழி உள்ளிட்ட விவசாயிகள் பங் கேற்ற கூட்டத்தில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் கூறியதாவது: பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்ந்த பூச்சிகள் ஒட்டி கொண்டு சாற்றை உறிஞ்சும். புகையான் தாக்கிய நெற்பயிர் தீய்ந்ததுபோல் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாகவும், முதிர்ச்சி யடைந்த பயிர்கள் காய் ந்து வட்டமான திட்டுகளா கவும் காணப்படும். மேலும் பயிர்கள் சாய்ந்து விடும். பயிரின் வளர்ச்சி பருவத்தில் தழைச்சத்து உர மான யூரியாவை சிபாரிசு செய்யப்படும் அளவிற்கு மேல் உபயோகிப்பது. பல்வேறு பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை கல ந்து பயிருக்கு தெளிப்பது. செயற்கை பயிரித்திராய்டு கலந்த மருந்துகளை பயன்படுத்துவது, நாற்றங்காலில் குருணை மருந்துகளை கட்டுப்பாடு இல்லாமல் உபயோகிப்பது போன்ற செய்முறைகள் புகையான் பூச்சி வருவதற்கு காரணங் களாகும். மேலும் மப்பும், மந்தாரமுமான சூழ்நிலை, இரவு வெப்பம் குறைந்து வானம் மேகமூட்டமாகவே இருந்து புழுக்கமான வானிலை நிலவியதால் புகையான் பூச்சி திடீரென இனப்பெருக்கம் அடைந்துள்ளது. வயலில் உடனடியாக தண்ணீரை வடித்து விட வேண்டும், நெல் வயலில் பட்டம் பிரித்து சூரிய ஒளி தூரின் அடிப்பாகத்தில் படுமாறு செய்ய வேண்டும். மேலும் இமிடாகுளோபிரிட் 100 மி.லி, டைகுளோர்வாஸ் 200 மி.லி, தையோமீத்தாச்சம் 100 கிராம், பியூபுரோபெசின் 330 மி.லிட்டரான இவற்றில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூரின் அடிப்பாகம் நனையுமாறு தெளிக்க வேண்டும். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்தார்.

## காரைக்காலில் அலங்கார செடிகள் விற்பனை துவக்கம்

காரைக்கால், : காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார் பில் பழமரம் மற்றும் அலங் கார செடிகளின் விற்பனை நேற்று துவங்கியது. நிலைய தலைவர் சுரேஷ் தலைமை வகித்தார். நிலைய முதல்வர் ராஜேந்திரன் மற்றும் தோட்டக்கலை வல்லுநர்கள் முன்னிலை வகித்தனர். முதல் விற்பனையை

துவக்கி வைத்து நிலைய தலைவர் சுரேஷ் பேசியதாவது: மாதூர் வேளாண் அறிவியல் நிலைய பண்ணையில் மீன், கோழி, முயல், பலவகை நெல், கத்திரி, கீரை உள்ளிட்ட பல்வேறு பயிர் வகைகள் பிரத்யேக முறையில் வளர்த்து, அதன் வளர்ச்சி குறித்து விவசாயிகளுக்கு இலவச பயிற்சி வழங்கி வருகிறோம். அதன்மூலம் விவசாயிகள் வருவாய் ஈட்டி வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதே வேளாண் அறிவியல் நிலையத்தின் குறிக்கோளாகும். அந்த வகையில் பழ மரங்கள் மற்றும் அலங்கார செடி வகைகளின் வளர்ப்பு மற்றும் விற்பனையையும் துவங்க வேண்டுமென பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று அண்டை மாநில பண்ணைகளில் மிக சிறப்பாக வளர்ச்சியடையும் கன்றுகளை உரிய ஆய்வுக்கு பின் வாங்கி வந்து விற்பனையை துவக்கியுள்ளோம். குறிப்பாக காரைக்கால் மண்ணுக்கேற்ற கொய்யா, சப்போட்டா, நெல்லி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழ மரக்கன்றுகளும், அனைத்துவகை செம்பருத்தி, அரளி, செவ்வந்தி, நந்தியாவட்டை, ரோஜா போன்ற பூச்செடிகளும், அலங்கார பனைவகை, கோல்டன் மூங்கில் போன்ற கன்றுகளையும் விற்பனைக்கு வைத்துள்ளோம். சந்தை விலையைவிட குறைவு என்பதால் முதல் நாளே அதிகளவில் விற்பனையாகியுள்ளது. அதனால் கூடுதல் கன்றுகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

## சீர்காழியில் அமைக்கப்பட்ட பண்ணை குட்டைகளில் வளர்க்க மீன் குஞ்சுகள் விநியோகம்

சீர்காழி, : சீர்காழியில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகளில் விடுவதற்காக மீன் குஞ்சுகள் விநியோகம் செய்யப்பட்டது. நாகை மாவட்டத்தில் தமிழ்நாடு மீன்வளத்துறை சார்பில் சுமார் 5 ஆயிரம் பண்ணை குட்டைகள் வெட்டப்பட்டது. ஒவ் வொரு குட்டைகளிலும் 1000 மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டு வருகிறது. கட்லா, ரோகு, மிருளா, வெள்ளிகெண்டை, புல்கெண்டை, சாதா கெண்டை ஆகிய ரகங்களை சேர்ந்த மீன் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குட்டைகளிலும் வளர்க்கப்படும் மீன்கள் 2, 3 கிலோ எடை வரை வளர்கின்றன. மீன் அறுவடையின்போது விவசாயிகளுக்கு ரூ.1 லட்சம் வரை லாபம் கிடைக்கிறது. அரசு சார்பில் மீன் குட்டை அமைக்க மானி யமாக ரூ.35 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதை பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வயல்களில் பண்ணை குட்டைகள் அமைத்து மீன்களை

வளர்த்து வருகின்றனர். இந்த நிலையில் சீர்காழி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டைகளுக்கு மீன் குஞ்சுகளை மீன்வளத்துறை ஆய்வாளர் மணிகண்டன், மேற்பார்வையாளர் கண்ணன் ஆகியோர் நேற்று வழங்கினர்.

**<u>மணிலா, உளுந்து பயிரிடும் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்</u>**

திருக்கனூர், :திருக்கனூர் பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையத்துக்குட்பட்ட சோரப்பட்டு உழவர் உதவியகத்தின் ஆத்மா திட்டத்தின் மூலம் மணிலா மற்றும் உளுந்து பயிரிடும் விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி முகாம் நடந்தது. மதகடிப்பட்டு துணை வேளாண் இயக்குநர் முத்துக்கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். பயிற்சி வழி தொடர்பு திட்ட கூடுதல் வேளாண் இயக்குநரும், ஆத்மா திட்ட இயக்குநருமான ரவிபிரகாசம் வரவேற்றார். ஆத்மா திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்து கூறியதுடன் களஆய்வு மேற்கொண்டார். காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய உழவியல் துறை நிபுணர் ரவி, மணிலா மற்றும் பயறு வகைகளில் பூ பூப்பதற்கு முந்தைய மற்றும் பிந்தைய பருவத்தில் கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறைகள், அதிக மகசூல் பெற மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பம் குறித்து விளக்கினார். பூச்சியியல் துறை நிபுணர் விஜயகுமார் மணிலா மற்றும் பயறு வகைகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து விரிவாக கூறினார். திருக்கனூர் வேளாண் அலுவலர் தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>கரும்புக்கு டன்னுக்கு ரூ.2,650 வழங்கப்படும்: முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு</u>**



சென்னை, கரும்புக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையுடன் பரிந்துரை விலையையும் சேர்த்து டன்னுக்கு ரூ.2,650 ஆக தமிழக அரசு வழங்கும் என்று

முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். இதுகுறித்து முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:- அதிக வருமானம் ஈட்ட வழி கரும்பு உற்பத்தியை பெருக்கவும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக வருமானம் ஈட்டிட வழி செய்யவும் பல்வேறு திட்டங் களை ஜெயலலிதா செயல்படுத்தியுள்ளார். அவர் வழியில் செயல்படும் இந்த அரசு அவற்றை தொய்வின்றித் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. கரும்பு உற்பத்தி திறனில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டத்தினை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. நிழல் வலைக் கூடங்கள் அமைக்கமானியம்வழங்கப்பட்டுவருகிறது.

75சதவீதமானியம்

மேலும், அங்ககப் பண்ணை முறைகளான பசுந்தாள் உர பயிர் சாகுபடி, உயிர் உரம் உபயோகித்தல் மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் ஆகியவை கரும்புச் சாகுபடியில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர, நுண்நீர் பாசன முறையை ஊக்குவிக்கும் வகையில், இதனைக் கையாளும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. நுண்நீர் பாசன மானியம் பெறுவதற்கு ஒரு ஏக்கர் உச்சவரம்பு என்றிருந்த வரையறையையும் ஜெயலலிதா நீக்கியுள்ளார். கரும்பு உற்பத்தியைப் பெருக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், கரும்பு விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு, மத்திய அரசு அறிவித்துவரும் நியாயமான மற்றும் ஆதாய விலையை விடக் கூடுதலான விலையை தமிழக அரசு வழங்கி வருகிறது.

மற்றமாநிலங்கள்

2011-12-ம் ஆண்டு டன் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 100 ரூபாய் எனவும்; 2012-13-ம் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 350 ரூபாய் எனவும்; 2013-14-ம் ஆண்டுக்கு 2 ஆயிரத்து 650 ரூபாய் எனவும் கரும்பின் விலையை ஜெயலலிதா நிர்ணயித்து வழங்கினார். 2014-15-ம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு ஒரு டன் கரும்புக்கு மத்திய அரசு 2 ஆயிரத்து 200 ரூபாய் என விலை நிர்ணயம் செய்துள்ளது.

தற்போது சர்க்கரைத் தொழிலில் நிலவி வரும் இக்கட்டான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பக்கத்து மாநிலமான கர்நாடகம், மத்திய அரசு அறிவித்த ஆதாய விலையான டன் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 200 ரூபாய் என்ற விலையை முதலில் வழங்கவும், பின்னர் டாக்டர் ரங்கராஜன் குழு பரிந்துரையான வருவாய் பகிர்மான கொள்கைப்படி விலை நிர்ணயம் செய்வதற்கும் முடிவு செய்துள்ளது. இதே அடிப்படையில், மராட்டிய மாநில அரசும் முடிவு செய்துள்ளது. டன்னுக்கு ரூ.2,650 இருப்பினும், தமிழக கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு கரும்புக்கு நிர்ணயித்த விலையான டன் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 200 ரூபாயுடன், மாநில அரசின் பரிந்துரை விலையாக போக்குவரத்துச் செலவு 100 ரூபாய் உட்பட 450 ரூபாய் உயர்த்தி, டன் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 650 ரூபாய் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பட்டு வளர்ச்சியை மேம்படுத்த ரூ. 3 கோடியே 50 லட்சம் மானிய உதவி கலெக்டர் விவேகானந்தன் தகவல்



தர்மபுரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சியை மேம் படுத்த ரூ.3 கோடியே 50 லட்சம் மதிப்பிலான மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று கலெக்டர் விவே கானந்தன் கூறினார்.

அதிகாரிகள் ஆய்வு

பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் தர்மபுரி மாவட்டத் தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கலெக் டர் விவேகானந்தன் தலைமை யிலான அதிகாரிகள் குழு வினர் நேற்று நேரடி ஆய்வு நடத்தினார்கள். அப்போது தர்மபுரி மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் பட்டுக்கூடு வளர்ப்பில் சிறப்பாக செயல் பட்டு வரும் சில உற்பத்தியாளர் களின் பட்டுப்புழு வளர்ப்பு மையங்களையும், பட்டு நூற்பு மையங்களையும், தர்மபுரி அரசு பட்டுக்கூடு அங்காடியை யும் அவர்கள் நேரில் பார்வை யிட்டனர். இந்த ஆய்வின் முடிவில் கலெக்டர் விவேகானந்தன் கூறியதாவது:– தமிழ்நாட்டில் பட்டுக்கூடு

பரிவர்த்தனையில் தர்மபுரி பட்டுக்கூடு அங்காடி முன் னிலை வகிக்கிறது. தமிழகத்தில் மிகப்பெரிய பட்டுக்கூடு அங் காடியாக தர்மபுரி அங்காடி உள்ளது. பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடு களை விற்பனைசெய்ய மாநி லத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தர்மபுரி அரசு பட்டுக் கூடு அங்காடிக்கு உற்பத்தி யாளர்கள் கொண்டு வருகி றார்கள்.

நல்ல விலை

இங்கு ஒரு நாளில் 3 முதல் 5 டன் வரை பட்டுக்கூடு வர்த்தகம் நடக்கிறது. பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளுக்கு இங்கு நல்ல விலை கிடைக்கிறது. தர்மபுரி மாவட்ட பட்டுக்கூடு அங்காடியில் 2013–2014–ம் ஆண்டில் 215 மெட்ரிக் டன் வெண்பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்யப்பட்டுள் ளது. கடந்த டிசம்பர் மாதம் வரை 416 மெட்ரிக் டன் வெண்பட்டுக்கூடுகள் வர்த்த கம் நடந்துள்ளது. 2014–2015–ம் ஆண்டிற்கான சமூக பொரு ளாதார மேம்பாட்டு திட்டத் தின் கீழ் விவசாயிகள் பட்டு தொழிலில் ஈடுபடுவதற்கு ஏது வாக தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு தர்மபுரி மாவட்டத்திற்கு அரசு ஒதுக் கீடு செய்துள்ள நிதி ரூ.11 லட் சத்து 92 ஆயிரத்து 500 ஆகும். மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் விவசாயிகள் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட ரூ.54 லட்சம் மதிப்பிலான திட்ட கருத்துரு அரசுக்கு அனுப்பபட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் பட்டு வளர்ப்பினை மேம்படுத்தும் பல்வேறு பணிகளுக்காக ரூ.3 கோடியே 50 லட்சம் மதிப்பி லான மானிய உதவிகள் வழங் கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் கூறினார். இந்த ஆய்வின்போது மாநில பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தலைவர் மணிவண்ணன், பட்டு வளர்ச் சித்துறை மண்டல இணை இயக்குனர் சுயம்பு, உதவி இயக்குனர்கள் நாரா யணன், சத்தியன் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் உடனிருந்தனர்.

## <u>திண்டுக்கல்லுக்கு விற்பனைக்கு வந்த 83 கிலோ எடை கொண்ட பிரமாண்ட பூசணிக்காய்</u>



திண்டுக்கல், திண்டுக்கல் மேட்டுப்பட்டியை சேர்ந்தவர் ஜீவா (வயது 27). இவர் அபிராமி அம்மன் கோவில் அருகே காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். பொங்கலையொட்டி வியாபாரம் மும்முரமாக நடக்கும் என்பதால், திண்டுக்கல்லை அடுத்த மா.மூ.கோவிலூருக்கு சென்று விவசாயிகளிடம் நேரடியாக காய்கறிகளை வாங்கினார். அப்போது ஏராளமான பூசணிக்காய் களையும் அவர் வாங்கினார். அவர் வாங்கிய பூசணிக்காய்களில் ஒரு பூசணிக்காய் மட்டும் 83 கிலோ எடை கொண்டதாக இருந்தது. இந்த பிரமாண்ட பூசணிக்காய் குறித்து ஜீவா கூறும்போது, 'பொதுவாக அதிகபட்சமாக ஒரு பூசணிக்காயின் எடை 15 கிலோ முதல் 20 கிலோ வரை இருக்கும். தற்போது, 83 கிலோவில் பூசணிக்காய் விளைந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இந்த பூசணிக்காயை பொங்கலையொட்டிதான் விற்பேன். அதுவரை இதை பொதுமக்களின் பார்வைக்காக வைத்திருப்பேன்' என்றார். தற்போது, பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அந்த பூசணிக்காயை ஏராளமான பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கிறார்கள். வெளிநாட்டில் பல நூறு கிலோ எடை கொண்ட பூசணிக்காய்கள் விளைவது சகஜம் என்றாலும், திண்டுக்கல்லில் விற்பனைக்காக வந்த 83 கிலோ பூசணி பொதுமக்களிடம் பெரும் வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

**களப்பணியாளர்களின் ஆலோசனை பெற்று உற்பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும் கலெக்டர் ஜெயந்தி பேச்சு**



களப்பணியாளர்களின் ஆலோசனை பெற்று உற்பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும் என்று கலெக்டர் ஜெயந்தி பேசினார்.

கையேடுவெளியிடும்நிகழ்ச்சி

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறையில் விவசாயம் செய்வது தொடர்பான நிகழ்ச்சியில் கலெக்டர் ஜெயந்தி கலந்து கொண்டு கையேட்டினை வெளியிட்டு பேசினார். அப்போதுஅவர்கூறியதாவது:-

தமிழகத்தில் 2-வது பசுமை புரட்சியை ஏற்படுத்திடவும் விரிவாக்கப் பணிகளை

மேலும் செம்மைபடுத்தி பண் ணையளவில் விவசாய விளைபொருள் குழுக்களை அமைக்கப்பட்டு உள்ளது. அந்த குழுவினர் விவசாய உற்பத்தியை அதிகரிப் பதற்கான ஆலோசனைகள் வழங்கி வருகிறது. மேலும், பயிர் சாகுபடி தொடர்பான இடர் பாடுகளை நீக்கி உரிய முறையில் விளைபொருட் களை சந்தைப்படுத்த தற்போதுள்ள விரிவாக்க முறையினை முறைபடுத்தி வருகிறது. அதன்படி 2-ம் பசுமைப் புரட்சியின் இலக்கான இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்ற குறிக் கோளினை அடைய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக வேளாண் மைத் துறையில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறையில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம் தொடர்பான கையேடு வெளியிடப் பட்டுள்ளது. பாதுகாப்பு ஆலோசனை

அதன்படி கரூர் மாவட்டத்தில் கடந்த 5-ந் தேதி முதல் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தில் விவசாயிகளின் கிராமங் களுக்கே களப்பணி யாளர்கள் நேரடியாக சென்று வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சம்பந்தமான தொழில்நுட்ப செய்திகளை வழங்குவர். பயிரின் ஒவ்வொரு வளர்ச்சி கட்டத்திலும் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்திட பயிர் பாது காப்பு ஆலோசனைகளை அளிப்பார்கள். பருவத்திற்கு ஏற்றபடி சாகுபடி செய் யும் பயிர்களில் கடை பிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்களை செயல்முறையாக செய்து காண்பிப்பார்கள். தீர்வு காணப்படும் முக்கியமான தருணங்களில் வேளாண் விஞ்ஞானிகளை வயல்களுக்கு அழைத்துச் சென்று இடர்பாடுகளுக்கு தீர்வு காணப்படும். விவசாயிகளின் விளைபொருளை சந்தைப் படுத்துதல் குறித்த ஆலோ சனைகளையும் வழங்கப் படும். கரூர் மாவட்ட விவசாய பெருமக்கள் தங்கள் பகுதிக்கு பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை வருகை புரியும் களப்பணியாளர்களை தொடர்பு கொண்டு விவசாயி கள் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு தொழில் நுட்பங் கள் மற்றும் ஆலோசனைகளை பெற்று உற்பத்தியை பெருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் அருணா, வேளாண் இணை இயக்குநர் தெய்வேந்திரன், ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் முகமது சகாபுதீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜேந்திரன் உட்பட பலர் உடன் இருந்தனர்.

## பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஊக்க தொகை



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குன்னம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 2012-2013-ம் ஆண்டுக்கான ஊக்க தொகை மற்றும் கறவை மாட்டு கடன் வழங்கும் விழா குன்னம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. குன்னம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர் குணசீலன் தலைமை தாங்கினார். வேப்பூர் ஒன்றிய குழு தலைவர் கிருஷ்ணகுமார், புதுவேட்டக்குடி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தனர். பால்வள துறை முதுநிலை ஆய்வாளர் வனராஜன் வரவேற்றார். விழாவில் முன்னாள் வாரிய தலைவர் ரவிச்சந்திரன் 1,611 உறுப்பினர்களுக்கு ஊக்க தொகையாக ரூ.9 லட்சத்து 4 ஆயிரத்து 733-ம், குன்னம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கம் சார்பில் கறவை மாட்டு கடனாக 63 பேருக்கு ரூ.15 லட்சத்து 75 ஆயிரமும் வழங்கினார். விழாவில் குன்னம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் ராஜேந்திரன், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க துணை தலைவர் உதயசூரியன், ஒன்றிய கவுன்சிலர் அமுதா முருகேசன், ஊராட்சி தலைவர்கள் இளங்கோவன், பரிமளம், நாகராஜ், பழனியம்மாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் சங்க செயலாளர் ராஜாராம் நன்றி கூறினார்.

## உடுமலை கோவில் வளாகத்தில் அதிசய காளான்



உடுமலை நேரு வீதியில் உள்ளது காமாட்சியம்மன் கோவில் வளாகத்தில் சுமார் 2 அடி சுற்றளவு கொண்ட காளான் வளர்ந்துள்ளது. சாதாரணமாக காளான் அதிகபட்சமாக ½ அடி சுற்றளவு கொண்டதாக இருக்கும். ஆனால் இந்த காளான் சுமார் 2 அடி சுற்றளவு கொண்டதாக உள்ளது. இந்த அதிசய

காளானை கோவிலுக்கு வரும் பக்தர்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.

**<u>உடுமலை, மடத்துக்குளம் பகுதிகளில் விதைப்பண்ணையில் விதைச்சான்று இணை இயக்குனர்ஆய்வு</u>**



உடுமலை, மடத்துக்குளம் பகுதிகளில் உள்ள விதைப்பண்ணைகளில் விதைச்சான்று இணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார்.

<u>விதைப்பண்ணைகளில்ஆய்வு</u>

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் நெல், சிறுதானியங்கள், பருத்தி, எண்ணெய்வித்துக்கள், பயிறு வகைகள் மற்றும் காற்கறி பயிர்களில் 5,320 ஏக்கர் பரப்பில் தனியார், அரசு, அரசு சார்பு நிறுவனங்களால் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு உயர் தரமான சான்று பெற்ற 2,951 மெட்ரிக் டன் அளவிலான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மேற்படி நிறுவனங்களால் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் கோவை விதைச்சான்று இணை இயக்குனர் பழனிச்சாமி உடுமலை மற்றும் மடத்துக்குளம் பகுதிகளில் நெல் சி.ஆர்.1009 (சாவித்திரி) ஆதாரநிலை–இரண்டு விதைப்பண்ணையில் நேற்று வயல் ஆய்வு மேற்கொண்டார். இதனை தொடர்ந்து பாப்பான்குளம் அரசு விதைப்பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள நெல்–ஏடிட்டி.39 மற்றும் நெல்–ஏடிட்டி (ஆர்) 45 ஆதார நிலை–ஒன்று விதைப்பண்ணைகளையும், விதைச்சுத்திகரிப்பு நிலைய பணிகளையும் ஆய்வு செய்தார்.

<u>அறிவுரை</u>

அப்போது உயர்ந்த தரமான விதைகளை உற்பத்தி செய்வதன் முக்கியத்துவத்தையும், அதிக அளவு தரமான விதைப்பண்ணைகள் அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து அதன் மூலம் கூடுதல் லாபம் அடைய விவசாயிகளுக்கும், விதை உற்பத்தியாளர்களுக்கும் அறிவுரை வழங்கினார். இந்த ஆய்வின் போது கோவை விதைச்சான்று உதவி இயக்குனர் டாம்

பி.சைலஸ், விதைச்சான்று அலுவலர்கள் டி.சக்திவேல், ஆர்.சீதா, சி.பி.விஜயலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு நெல் வரத்து அதிகரிப்பு</u>**



திருக்கோவிலூர், அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு நெல் வரத்து அதிகமாக வந்தது. <u>நெல் வரத்து அதிகரிப்பு</u>

சம்பா அறுவடை பருவம் தொடங்கியுள்ளதை முன்னிட்டு தற்போது அரகண்டநல்லூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு நெல் வரத்து தொடங்கியுள்ளது. நேற்று 4 ஆயிரத்துக்கும் அதிகமான நெல் மூட்டைகள் வந்தன. இதில் 100 கிலோ கொண்ட ஏ.டி.டி. 45 ரக நெல் குறைந்தபட்சம் மூட்டை ஒன்றுக்கு ரூ.1,010–க்கும், அதிகபட்சம் ரூ.1,144–க்கும், ஏ.டி.டி. 39 ரக நெல் குறைந்தபட்சம் ரூ.985–க்கும், அதிகபட்சம் ரூ.1,080–க்கும், வெள்ளை பொன்னி குறைந்தபட்சம் ரூ.1,150–க்கும், அதிகபட்சம் ரூ.1,550–க்கும், ஆந்திர பொன்னி ரகம் குறைந்தபட்சம் ரூ.1,070–க்கும், அதிகபட்சம் ரூ.1,190–க்கும், குண்டு ரக நெல் குறைந்தபட்சம் ரூ.967–க்கும், அதிகபட்சம் ரூ.1,187–க்கும் விற்பனையானது. இதேபோல் 100 கிலோ கொண்ட உளுந்து மூட்டை ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.5,600–க்கும் அதிகபட்சம் ரூ.6,150–க்கும் விற்பனையானது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், இங்கு விவசாயிகள் கொண்டு வரும் தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவது இல்லை. இதனால் தான் அருகில் உள்ள செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு விவசாயிகள் அதிகளவில் தானியங்களை எடுத்துச் செல்கின்றனர். அங்கு பணப்பட்டுவாடா சரியாக நடக்கிறது. இங்கு பணம் பட்டுவாடா செய்வதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு பொறுப்பான அதிகாரி இல்லாததே இதற்கு முக்கிய காரணமாகும். எனவே மாவட்ட நிர்வாகம் இந்த நிலையை போக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.